[24th March 1959

SRI A. VEDARATHNAM : இந்த முறையில் யாருக்கு இந்த சிறப்புகள் வழங்கப்பட்டன ? அவர்களுக்கு அதற்கு என்னென்ன தகுதிகள் இருந்தன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளிக்கூட ஹெட்மாஸ்டருக்கும், சென்னை திரு. வி. க. பள்ளிக்கூட ஆசிரியருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய தகுதிகள் இருந்ததினால்தான் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கின்றனர்.

SRI K. VINAYAKAM : Sir, does the Hon. Minister for Edu-
9 a.m. cation interview these selected teachers before submitting their names to the Government of India, so as to ensure the fool-proof *modus operandi* of the system that is effected in selecting these teachers?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think that, after so much of filtering, the Education Minister should take the responsibility of interviewing and judging them; it is best decided and judged by the Committee Members.

Opening of Junior Basic Schools

*982-C *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :

(அ) இந்திய சர்க்காரின் உதவியினால் சென்னை இராஜ்யத்திலிருக்கும் இராமங்களிலே திறக்கப்படப்போகும் ஜூனியர் ஆதாரப்பள்ளிக்கூடங்களிலே கோயமுத்தூர் ஜில்லாவிலே ஒவ்வொரு தாலூக்காவிலும் எத்தனைப் பள்ளிக் கூடங்கள் திறக்கப்படும் ?

(ஆ) இப்பள்ளிக்கூடங்களின் செலவினங்களுக்காக எவ்வளவு தொகை 1959-ம் வருடத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is no proposal to open Junior Basic Schools in Coimbatore District with the aid of the Government of India.

(*b*) Does not arise.

*982-D *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :

(அ) கல்வி கற்றவர்களிடையே வேலையில்லா கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காகவும், குறிப்பாக மிகமிகப் பிற்போக்கான இராமங்களிலே 900 ஜூனியர் ஆதாரப் பள்ளிக்கூடங்களை சென்னை இராஜ்யத்திலே நிறுவுவதற்காகவும் இந்திய சர்க்காரின் உதவியிலே கொண்டு வரப்பட்டிருக்கும் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) இப்பள்ளிக்கூடங்களானது எப்போது நிறுவப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Rs. 7,44,500, Sir.

(*b*) It is hoped that these schools will be established before the end of the current financial year, i.e., 31st **March 1959.**

Evidently, the hon. Member is referring to the schools to be opened for relieving unemployment.

24th March 1959]

Sri P. G. MANICKAM : மேற்படி பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கும் போது அதில் எஸ்.எஸ்.எல்.ஸி படித்த ஆசிரியர்களை போடுவதற்கு அரசாங்கம் ஆலோசித்திருக்கிறதா ? இதில் அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதில் எஸ். எஸ். எல். ஸி. படித்த ஆசிரியர்களை நியமித்துக்கொண்டுதான் இருக்கிறோம். மேலும் ஆசிரியர்பயிற்சி பெற்றவர்கள் இருந்தால் அவர்களை போடுவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Sri A. VEDARATHNAM : இந்த ஆலோசனை கமிட்டியின் சிபாரிசுபடி இந்த ஆதார பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றனவா ? இல்லையென்றால் ஏன் ஆரம்பிக்கப்படவில்லை. எப்போது ஆரம்பிக்கப்படும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த கேள்வி அதைப் பற்றியது அல்ல, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக 900 பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நான் முன்னாலே சொன்னேன், இந்த கேள்வியை தவறாக கேட்டிருக்கிறார்கள் என்று.

Sri K. R. VISWANATHAN : Sir, there is at present the policy of the Government to open Junior Basic Schools only in Basic-belt areas and that is a hardship to those who are coming forward for opening basic schools from the non-Basic-belt areas. Will the Government reconsider the policy and issue instructions that even in non-Basic-belt areas, Junior Basic Schools can be opened?

The Hon. Sri C. SUBRAMANIAM : That is a policy adumbrated for the purpose of proper development of Basic Schools so that there may be the proper atmosphere. If there is a basic school in non-basic-belt areas, the atmosphere for the purpose of development of that school will not be there. Now a Committee has been appointed and they have made their recommendations. Hereafter, steps should be taken in accordance with the recommendations of the Expert Committee.

Sri P. G. MANICKAM : ஸார், இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக ஏற்படுத்தப்போகும் இந்த 900 பள்ளிக்கூடங்களில் எத்தனை எத்தனை பள்ளிக்கூடங்கள் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஏற்படுத்தப்படும் ? அதில் 1958–59-ல் எத்தனை பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த 900 பள்ளிக்கூடங்களையுமே 1958–59-ல் ஏற்படுத்தவேண்டுமென்றுதான் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஜில்லாவாரியாக எத்தனைப் பள்ளிக்கூடங்கள் என்பதற்கு என்னிடம் இப்போது தகவல் இல்லை.

Posts of Senior and Junior Inspectors of Schools

* 982-E *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state, district-war, the number of posts of Senior and Junior Deputy Inspectors of Schools kept vacant?

The Hon. Sri C. SUBRAMANIAM : No post of Deputy Inspector or Junior Deputy Inspector of Schools is kept vacant now.